பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 07 2026 WEDNESDAY 12 40 PM

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - பிரிட்டன் இடையே இன்று அமலுக்கு வந்துள்ள விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம், வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

2. தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் பிறந்த நாளையொட்டி தலைவர்கள் பலர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

3. இளையோரின் ஆற்றல் நாட்டின் மிகப் பெரிய சக்தியாக விளங்குவதாக மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.

4. ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

5. உலக கோப்பை கால்பந்துப் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் அர்ஜென்டினா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

>>>>>>><<<<<<

இந்தியா - பிரிட்டன் இடையே இன்று அமலுக்கு வந்துள்ள விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தம், வரலாற்றுச் சிறப்புமிக்கது என்று மத்திய வர்த்தகத் துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயல் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதள பதிவில், பிரிட்டனுக்கு இந்தியா ஏற்றுமதி செய்யும் 99 சதவீத பொருட்களுக்கு 100 சதவீத வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த விரிவான வர்த்தக ஒப்பந்தம் மூலம், நாட்டின் ஜவுளித்துறை, தோல்துறை, சிறு குறு நடுத்தர தொழில்முனைவோர், விவசாயிகள் உள்ளிட்டோர் பெரிதும் பயனடைவார்கள் என்று திரு. பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

இந்தியா - பிரிட்டன் இடையேயான வர்த்தக ஒப்பந்தம், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக முக்கியத்துவம் வாய்ந்தது என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இதன்மூலம் நாட்டின் ஏற்றுமதி அதிகரிக்கும் என்று தெரிவித்துள்ளார்.

சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு, பல்வேறு நாடுகளுடன் தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளதன் விளைவாக, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட முடியும் என்று திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதில் இந்தியா – பிரிட்டன் வர்த்தக ஒப்பந்தம் முக்கிய மைல் கல்லாக திகழ்வதாக மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், இந்த ஒப்பந்தம் மூலம் விவசாயிகளும், வேளாண் துறையினரும் பயனடைவார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்துள்ளதை அடுத்து, சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரிட்டன் துணைத் தூதர் Dr. Sutapa Chaudhary, இந்தியாவிலிருந்து பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ள பொருட்களை கொடியசைத்து அனுப்பி வைத்தார்.

இந்த விரிவான பொருளாதார வர்த்தக ஒப்பந்தத்தின் மூலம் இருநாடுகளுக்கு இடையேயான பொருளாதார உறவுகள் மேம்படும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதேபோல், தமிழகத்தின் கரூரில் நடைபெற்ற பிரிட்டனுக்கு, ஜவுளிப் பொருட்களை அனுப்பி வைக்கும் நிகழ்ச்சியில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் கோவை மண்டல கூடுதல் தலைமை இயக்குநர் திரு. Sridhar பங்கேற்றுப் பேசினார்.

(சவுண்ட் பைட் - ஸ்ரீதர் 50 செகண்ட்ஸ்)

>>>>>>><<<<<<<

தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசு துணைத்தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மரியாதை செலுத்தியுள்ளனர்.

குடியரசு துணைத்தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், எளிமை, நேர்மை, தன்னலமற்ற மக்கள் சேவை ஆகியவற்றின் உயரிய அடையாளமாக திகழ்ந்தவர் காமராஜர் என்று தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு குழந்தையும் கல்வி பெறும் நோக்கில், ஆயிரக்கணக்கான பள்ளிகளை தொடங்கி, ஏழை மற்றும் கிராமப்புற மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அவர் வழிவகுத்தார் என்று திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி வெளியிட்டுள்ள பதிவில், நாட்டின் சுதந்திரத்திற்காகவும், தேசத்தின் வளர்ச்சிக்காகவும் தமது வாழ்க்கையை அர்ப்பணித்தவர் காமராஜர் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டின் வளர்ச்சி, கல்வி, ஏழை எளியோரின் நலன் போன்றவற்றில் அவரது பங்களிப்பை நினைவுகூர்வதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் வெளியிட்டுள்ள வலைதளப் பதிவில், தேசத்தை முன்னேற்றக்கூடிய ஒரே சக்தி கல்வி என்பதை நம்பிய அவர், எளிய குடும்பத்தினரின் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கில், மதிய உணவு திட்டத்தை அறிமுகம் செய்து புரட்சி செய்தவர் காமராஜர் என்று கூறியுள்ளார்.

தமிழகம் இன்று அடைந்திருக்கும் பல்வேறு வளர்ச்சிகளுக்கு வித்திட்டவர் காமராஜர் என்று டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

>>>>>>><<<<<<<

கர்நாடகாவிலிருந்து திரு. மன்சூர் அலிகானும், மத்தியப்பிரதேசத்திலிருந்து திரு. Rajneesh Kumar Agarwal-ம் மாநிலங்களவை உறுப்பினர்களாக இன்று பதவியேற்றுக் கொண்டனர்.

குடியரசு துணைத்தலைவரும். மாநிலங்களவைத் தலைவருமான திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், அவர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

>>>>>>><<<<<<<

இளையோரின் ஆற்றல் நாட்டின் மிகப் பெரிய சக்தி என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறியுள்ளார்.

உலக இளையோர் திறன் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதையொட்டி, சமூகவலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை எட்ட இளையோரின் பங்களிப்பு இன்றியமையாதது என்று தெரிவித்துள்ளார்.

நாட்டில் உள்ள அனைத்து இளைஞர்களும், நவீன திறன் பயிற்சி பெற்று இந்தியாவை முன்னணி நாடாக மாற்ற முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு. ஓம் பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்நாளையொட்டி உத்தரப்பிரதேசம், தில்லி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

>>>>>>><<<<<<<

திறன் இந்தியா இயக்கத்தின் 11-வது ஆண்டு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

கடந்த 2015ஆம் ஆண்டு இதேநாளில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, திறன் இந்தியா இயக்கத்தை தொடங்கி வைத்தார்.

இளையோர்களுக்கு திறன் பயிற்சி அளித்து, தொழில் நிறுவனங்களுக்கு தேவையான பயிற்சி பெற்ற பணியாளர்களை வழங்குவதற்காகவே இந்த இயக்கம் தொடங்கப்பட்டது.

இதன்மூலம் 6 கோடி இளைஞர்கள் திறன் பயிற்சி பெற்றுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

ஒவ்வோராண்டும் திறன் இந்தியா இயக்கத்தின் மூலம், ஆண்டுதோறும் ஒரு கோடி இளைஞர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

>>>>>>><<<<<<<

தேசிய புலனாய்வு முகமை மஹாராஷ்ட்ராவில் நடத்தும் புலனாய்வு

வழக்குகளை விசாரிக்க சிறப்பு நீதிமன்றத்தை அமைக்க மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக, மும்பை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் மஹாராஷ்ட்ர மாநில அரசுடன் ஆலோசனை மேற்கொண்ட பின், இதுதொடர்பான அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மும்பை மாநகர நீதிமன்றத்தின் வளாகத்திலேயே, இந்த வழக்குகளை விசாரிக்க இடம் ஒதுக்கப்படவுள்ளது.

தேசிய புலனாய்வு முகமையின் நிலுவையில் உள்ள வழக்குகளுக்கு விரைந்து தீர்வு காணும் வகையில் இந்த சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்படவுள்ளது.

>>>>>>><<<<<<<

ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலில் சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று இந்தியா மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக பேசிய ஐ.நா-வுக்கான இந்தியாவின் நிரந்தர பிரதிநிதி திரு. Harish, சீர்திருத்தம் மேற்கொள்ளப்படாவிட்டால், ஐ.நா மீதான மக்களின் நம்பிக்கை குறைய வாய்ப்புள்ளதாக கூறினார்.

80 ஆண்டுகள் பழமையான ஐ.நா-வின் சட்டங்கள், உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள போதுமானதல்ல என்று அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் சீர்திருத்தம் தொடர்பான பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் இல்லை என்று அவர் குறிப்பிட்டார்.

அனைத்து நாடுகளும் வளர்ச்சியடைவதற்கு பொருளாதார உதவி வழங்க இந்தியா உறுதிபூண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சர்வதேச நிதி நிறுவனங்கள், வளர்ச்சித் திட்டங்களுக்கு கடனுதவி அளிக்க வேண்டும் என்று திரு. Harish வலியுறுத்தினார்.

>>>>>>><<<<<<<

ஜம்மு கஷ்மீரில் வரும் சனிக்கிழமை முதல் கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

ஜம்மு பகுதியில் கனமழையால் Chenab பள்ளத்தாக்கு, பீர்பாஞ்சல் மலைப்பகுதிகளில் வரும் திங்கட்கிழமை முதல் 3 நாட்களுக்கு கனமழை பெய்யக்கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

>>>>>>><<<<<<<

உலக கோப்பை கால்பந்துப் போட்டியின் இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் அர்ஜென்டினா - இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

அட்லாண்டாவில் இப்போட்டி நள்ளிரவு மணி 12.30-க்கு தொடங்குகிறது.

>>>>>>><<<<<<<

இலங்கைக்கு எதிரான முதலாவது இளையோர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் மூன்றாவது நாளான இன்று இந்தியா முதல் இன்னிங்ஸில் விக்கெட் இழப்பின்றி 257 ரன் எடுத்திருந்த நிலையில், மழை காரணமாக தற்போது ஆட்டம் தடைபட்டுள்ளது.

Galle-ல் நடைபெற்று வரும் இப்போட்டியில், இலங்கை அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 424 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

>>>>>>><<<<<<

18 வயதுக்குட்பட்டோருக்கான ஆசிய கோப்பை மகளிர் கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று இந்தோனேஷியாவை எதிர்கொள்கிறது.

பாங்காக்கில் இப்போட்டி பிற்பகல் மணி 2.30-க்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஓமனுக்கு எதிரான இரண்டாவது ஆட்டத்தில் 99-17 புள்ளிக்கணக்கில் இந்தியா வெற்றிபெற்றது.

>>>>>>><<<<<<